# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1947/5 - 2015 දෙසැම්බර් මස 28 වැනි සඳුදා - 2015.12.28

*1947/5 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி

அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், காணிகள், காணிகள் அபிவிருத்தி அமைச்சரின் உடன்பாடுடைய இதன் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தியதலாவ வான்படை முகாம் சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம் என அழைக்கப்படவேண்டிய சூட்டு வீச்சிடமொன்றை இவ்வொழுங்குவிதியினால் தாபிக்கிறேன். மேலும் அக்குறித்த சூட்டு வீச்சிடத்தின் எல்லைகள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் அதனையொத்த குறிப்புகளுக்கு குறித்துரைத்துக் காண்பிக்கப்பட்டுள்ள எல்லைகள் ஆகும்.

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| தியதலாவ வான்படை முகாம் சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம் | ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில் அப்புத்தளை பிரதேச செயலகப் பிரிவில் கஹகொல்ல கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட B/ HTP/ 2015/20 எனும் உப தொகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு மொத்த அளவும் எல்லைகளும் கொண்ட காணிகள் இரண்டினதும் எல்லைகள் :- |

1. **துண்டு இலக்கம் A - கல்காவ பதஹேனே பதன- விஸ்தீரணம் : 0.955 ஹெக்டெயார்.**

வடக்கு : 939 இலக்கத்துண்டு ;
கிழக்கு : 938 இலக்கத்துண்டும் B யும் ;
தெற்கு : B இலக்கத்துண்டு ;
மேற்கு : 939 இலக்கத்துண்டு.

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|
| | 2. **துண்டு இலக்கம் B - கல்காவ பதஹேனே பதன- விஸ்தீரணம் : 0.6454 ஹெக்டெயார்.**<br><br>வடக்கு : 939 இலக்க A துண்டும் 938 உம் ;<br>கிழக்கு : 938 இலக்கத்துண்டு ;<br>தெற்கு : 938 இலக்கத்துண்டு ;<br>மேற்கு : 938, 939 இலக்கத்துண்டுகளும் A உம். |

*1- 487/1*

---

**துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

*3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 3 (1) ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளையினால் கீழ்க்காணும் விதம் பணிக்கிறேன்.*

(அ) இந்த அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் அதன் அட்டவணையின் II ஆம் நிரலை நேரொத்த நிரலில் குறித்துக் காண்பித்துள்ள சுடுகை பயிற்சிகளுக்காக உபயோகத்துக்கு எடுக்கப்படவேண்டுமெனவும் ;

(ஆ) மேற்குறிப்பிட்ட துப்பாக்கிச் சூட்டு வீச்சிடம் இலங்கை வான்படை, இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படையினால் உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ள முடியுமெனவும் தீர்மானிக்கிறேன்.

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|
| தியதலாவ வான்படை முகாம் சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம் | (அ) விட்டம் 7.62 மி.மீ. வரையிலான தன்னியக்க பாரமற்ற ஆயுதங்கள் ;<br><br>(ஆ) விட்டம் 11.43 மி. மீ. வரையிலான தன்னியக்க பாரமற்ற ஆயுதங்கள். |

*1- 487/2*

---

**துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

*அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1983 ஆம் ஆண்டின் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதில் இதனகத்துப் பின்னர் "தியதலாவ வான்படை முகாம் சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம்" என எடுத்துக்காட்டப்படும்) தியதலாவ வான்படை முகாம் சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர் கொண்ட சூட்டு வீச்சிடம் 11.43 மி. மீ. வரையான பாரமற்ற ஆயுத சுடுகைகளைத் தவிர ஏனைய சுடுகைகளுக்காக உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளல் ஆகாது.

3. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், தியதலாவ வான்படை சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர் சூட்டு வீச்சிடத்தின் எல்லையில் பொருத்தமான இடங்களில் துலாம்பரமாக தெரியக்கூடிய விதத்தில் அறிவித்தல்கள் காட்சியிடப்படுதல் வேண்டும். அக்குறிகளினுள் சூட்டு வீச்சிடமொன்றை தாபிக்கப்பட்டுள்ளமையும், சுடுகையை ஆரம்பிப்பதற்கு நெருங்குகையில் அல்லது சுடுதலை நடாத்துகையில் கீழ் காணப்படும் இடங்களில் பகல் நேரத்தில் சிவப்புக் கொடிகளை உயர்த்தி வைப்பதாகவும், இரவு நேரங்களில் சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றி வைப்பதாகவும் அவ்வறிவித்தல்களில் குறிக்கப்படுதல் வேண்டும்.

சுடுகை மேடும் வெளிச்சுடுகை மேடும்
சுடுகை நடாத்தும் இடம்

தியதலாவ - பண்டாரவெல பிரதான வீதியின் 450 மீற்றர் அளவில் நிலஅளவும் நில வரைபடமும் இடம்பெறும் நிறுவன பூமியின் கிழக்கு எல்லை வழியாக வடக்குப் பக்கமாக உள்ள மெனிக் கந்த பாதையில் 250 மீற்றர் தூரத்திலிருந்து 100 மீற்றர் அளவில் 320 பாகை திசைமுகப்படுத்தப்பட்ட இடத்தில்,

4. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், தியதலாவ வான்படை சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர் சூட்டு வீச்சிடத்தில் சுடுகையை ஆரம்பிப்பதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்னரிலிருந்து சுடுகை முடியும் வரையிலான காலத்தினுள் கீழ் காணப்படும் இடங்களில் பகல் நேரத்தில் சிவப்புக் கொடிகளை உயர்த்தி வைப்பதாகவும், இரவு நேரங்களில் சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றி வைப்பதாகவும் அவ்வறிவித்தல்களில் குறிக்கப்படுதல் வேண்டும்.

சுடுகை மேடும் வெளிச்சுடுகை மேடும்
சுடுகை நடாத்தும் இடம்

தியதலாவ - பண்டாரவெல பிரதான வீதியின் 450 மீற்றர் அளவில் நில அளவும் நில வரைபடமும் இடம்பெறும் நிறுவன பூமியின் கிழக்கு எல்லை வழியாக வடக்குப் பக்கமாக உள்ள மெனிக் கந்த பாதையில் 250 மீற்றர் தூரத்திலிருந்து 100 மீற்றர் அளவில் 320 பாகை திசைமுகப்படுத்தப்பட்ட இடத்தில்.

5. அவ்வாறு 3 ஆம் கட்டளைக்கு இணங்க தியதலாவ வான்படை சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர், சிற்றாயுத சூட்டு வீச்சிடம் அருகாமையில் சிவப்புக் கொடிகள் ஏற்றி வைக்கும் அல்லது சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் 3 ஆம் பிரிவின் பிரகாரம், 100 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடங்களில் பங்கு பெறுவோரைத் தவிர வேறு எந்தவொரு நபரொருவருக்கும் சூட்டு வீச்சிட எல்லைக்குள் நுழைவதற்கோ அல்லது அதன் சுற்றுப் புறத்தில் நடமாடுவதற்கோ அனுமதி வழங்குதல் ஆகாது.

6. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், தியதலாவ வான்படை சண்டைப் பயிற்சிக் கல்லூரியின் 100 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடத்தில் வெடிவைக்கும் பணிகளில் ஈடுபடும் நபர்களின் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுதல் வேண்டும்.

**1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, துப்பாகிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

2 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி

அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1951 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, துப்பாகசிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், காணிகள், காணிகள் அபிவிருத்தி அமைச்சரின் உடன்பாடுடைய இதன் அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மொரவெவ வான்படை முகாமில் 300 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம் என அழைக்கப்படவேண்டிய சூட்டு வீச்சிடமொன்றை இவ்வொழுங்கு விதியினால் தாபிக்கிறேன். மேலும், அக்குறித்த சூட்டு வீச்சிடத்தின் எல்லைகள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் அதனையொத்த குறிப்புகளுக்கு குறித்துரைத்துக் காண்பிக்கப்பட்டுள்ள எல்லைகள் ஆகும்.

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | II ஆம் நிரல் |
|---|---|
| மொரவெவ வான்படை முகாமின் 300 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம் | கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டத்தில் மொரவெவ பிரதேச செயலகப் பிரிவில் மொரவெவ கிராமத்தில் அமைந்துள்ள அளவையாளர் நாயகம் அவர்களால் தயாரிக்கப்பட்ட TR/ MRW/ 2014/148 எனும் உப தொகுதியில் காட்டப்பட்டுள்ளவாறு மொத்த அளவு 300 ஹெக்டெயார் உடைய கீழே காட்டப்பட்டுள்ள எல்லைகளைக் கொண்ட காணி.<br><br>1. துண்டு இலக்கம் A - பான்குளம்காடு - 3.0 ஹெக்டெயார் பரப்பு.<br><br>வடக்கு : கா. மு. அ. 33 இல் 688 இலக்கத்துண்டு ;<br>கிழக்கு : கா. மு. அ. 33 இல் 688 இலக்கத்துண்டு ;<br>தெற்கு : கா. மு. அ. 33 இல் 688 இலக்கத்துண்டு ;<br>மேற்கு : கா. மு. அ. 33 இல் 688 இலக்கத்துண்டு ; |

1- 487/4

---

**துப்பாகிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

3 ஆம் பிரிவின் கீழான கட்டளை

அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள், இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், பாதுகாப்பு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இக்கட்டளையினால் கீழ்காணும் விதம் பணிக்கிறேன்.

(அ) இந்த அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் அதன் அட்டவணையின் II ஆம் நிரலை நேரொத்த நிரலில் குறித்துக் காண்பித்துள்ள சுடுகை பயிற்சிகளுக்காக உபயோகத்துக்கு எடுக்கப்படவேண்டுமெனவும் ;

(ஆ) மேற்குறிப்பிட்ட துப்பாக்கிச் சூட்டு வீச்சிடம் இலங்கை வான்படை, இலங்கைத் தரைப்படை, இலங்கை கடற்படையினால் உபயோகத்துக்கு எடுத்துக்கொள்ள முடியுமெனவும் தீர்மானிக்கிறேன்.

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

**அட்டவணை**

| *I ஆம் நிரல்* | *II ஆம் நிரல்* |
|---|---|
| மொரவெவ வான்படை முகாமின் 300 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சிச் சூட்டு வீச்சிடம். | (அ) 7.62 மி. மீ. விட்டம் வரையிலான தன்னியக்க பாரமற்ற ஆயுதங்கள். |

1- 487/5

---

**துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டம்**

அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் மற்றும் இராணுவப் பயிற்சிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழ் பாதுகாப்பு அமைச்சர் அவர்களால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

மைத்திரிபால சிறிசேன,
பாதுகாப்பு அமைச்சர்.

கொழும்பு,
2015, திசெம்பர் 18.

ஒழுங்குவிதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 1983 ஆம் ஆண்டின் துப்பாக்கிச் சூட்டு வீச்சிடங்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (இதில் இதனகத்துப் பின்னர் "மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர்கள் கொண்ட சிற்றாயுத பயிற்சி சூட்டு வீச்சிடம்" என எடுத்துக் காட்டப்படும்) மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர்கள் கொண்ட சூட்டு வீச்சிடம் 7.62 மி. மீ. வரையான பாரமற்ற ஆயுத சுடுகைகளைத் தவிர ஏனைய சுடுகைகளுக்காக உபயோகத்துக்கு எடுத்துக் கொள்ளல் ஆகாது.

3. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர் சூட்டு வீச்சிடத்தின் எல்லையில் பொருத்தமான இடங்களில் துலாம்பரமாக தெரியக்கூடிய விதத்தில் அறிவித்தல்கள் காட்சியிடப்படுதல் வேண்டும். அக்குறிகளினுள் சூட்டு வீச்சிடமொன்று தாபிக்கப்பட்டுள்ளமையும், சுடுகையை ஆரம்பிப்பதற்கு நெருங்குகையில் அல்லது சுடுதலை நடாத்துகையில் கீழ் காணப்படும் இடங்களில் பகல் நேரத்தில் சிவுப்புக் கொடிகளை உயர்த்தி வைப்பதாகவும், இரவு நேரங்களில் சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றி வைப்பதாகவும் அவ்வறிவித்தல்களில் குறிக்கப்படுதல் வேண்டும்.

சுடுகை மேடும் வெளிச்சுடுகை மேடும்
சுடுகை நடாத்தும் இடம்

அநுராதபுரம் பிரதான வீதியில் மொரவெவ வான்படை முகாமுக்கு திரும்பும் சந்தி மற்றும் குளம் வீதியிலிருந்து மொரவெவ வான்படை முகாமுக்குச் செல்லும் வழியில் துணைப் பாதுகாப்புக் கூடத்துக்கு முன்னால் அமைந்துள்ள இடம்.

4. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடத்தில் சுடுகையை ஆரம்பிப்பதற்கு அரை மணித்தியாலயத்திற்கு முன்னரிலிருந்து சுடுகை முடியும் வரையிலான காலத்தினுள் கீழ் காணப்படும் இடங்களில் பகல் நேரத்தில் சிவப்புக் கொடிகளை உயர்த்தி வைப்பதாகவும், இரவு நேரங்களில் சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றி வைப்பதாகவும் அவ்வறிவித்தல்களில் குறிக்கப்படுதல் வேண்டும்.

சுடுகை மேடும் வெளிச்சுடுகை மேடும்
சுடுகை நடாத்தும் இடம்

அநுராதபுரம் பிரதான வீதியில் மொரவெவ வான்படை முகாமுக்கு திரும்பும் சந்தி மற்றும் குளம் வீதியிலிருந்து மொரவெவ வான்படை முகாமுக்குச் செல்லும் வழியில் துணைப் பாதுகாப்புக் கூடத்துக்கு முன்னால் அமைந்துள்ள இடம்.

5. அவ்வாறு 3 ஆம் கட்டளைக்கு இணங்க மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடம் அருகாமையில் சிவப்புக் கொடிகள் ஏற்றி வைக்கும் அல்லது சுற்றிவர சிவப்பு வெளிச்சம் ஏற்றப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் 3 ஆம் பிரிவின் பிரகாரம், 300 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடங்களில் பங்குபெறுவோரைத் தவிர வேறு எந்தவொரு நபரொருவருக்கும் சூட்டு வீச்சிட எல்லைக்குள் நுழைவதற்கோ அல்லது அதன் சுற்றுப் புறத்தில் நடமாடுவதற்கோ அனுமதி வழங்குதல் ஆகாது.

6. வான்படை அதிபர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரால், மொரவெவ வான்படை முகாம் 300 மீற்றர் சிற்றாயுத சூட்டு வீச்சிடத்தில் வெடிவைக்கும் பணிகளில் ஈடுபடும் நபர்களின் பாதுகாப்பிற்காகத் தேவைப்படும் தொடர்புபட்ட ஒழுங்குவிதிகள் வெளியிடப்படுதல் வேண்டும்.

1- 487/6

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.